இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 26-08-2024

# சூப்பர் ஸ்டாரின் பாராட்டு!

**மாண்புமிகு அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் எழுதிய ‘கலைஞர் எனும் தாய்’ நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் ஆற்றிய உரை என்பது இதயத்தின் அடியாழத்திலிருந்து ஆற்றிய உரையாக அமைந்திருந்தது.**

**முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இருவரையும் மிகப்பெரிய ஆளுமைகளாக வியந்து பேசினார் ரஜினிகாந்த் அவர்கள். பொதுவாக மேடைகளுக்கு வருவதில்லை, அதிலும் குறிப்பாக அரசியல் மேடைகளுக்கு வருவது இல்லை என்பதைத் தெளிவுபடுத்தி விட்டு, அவர் பேசிய அரசியல் என்பது மிகமிகத் தெளிவானது.**

**“சுற்றி இருக்கும் ஐம்பது பேருக்காக வாழ்ந்து செத்துப் போவதுதான் மனிதனின் இயல்பு. ஆனால் இனத்துக்காக, மொழிக்காக, சமூகத்துக்காக தனது ஒட்டு மொத்த வாழ்க்கையையும் ஒப்படைத்து வாழ்வதுதான் பெரிய பேறு. அத்தகைய வாழ்க்கை வாழ்ந்தவர் கலைஞர்”** என்ற வரியில் தலைவர் கலைஞரின் ஒட்டு மொத்த போராட்டக் குணத்தையும், அருந்தொண்டையும் அடக்கிச் சொன்னார் ரஜினிகாந்த் அவர்கள்.**“கலைஞர் அனுபவித்த துன்பத்தை வேறு ஒருவர் அனுபவித்திருந்தால் அவர்கள் எப்போதோ காணாமல் போயிருப்பார்கள். ஆனால் கலைஞரால் மட்டும்தான் இன்று வரை பிரகாசிக்க முடிகிறது. அவர் மறைவுக்குப் பிறகு தான் அதிகமாக நினைக்கப்படுகிறார். இனி தான் அவர் அதிகமாக நினைக்கப்படுவார்”** என்றார் ரஜினி காந்த் அவர்கள்!

“ஒரு மனிதனின் வரலாறு என்பது அவனது மரணத்துக்குப் பிறகு கணக்கிடப்பட வேண்டும்” என்று சொன்னவர் தலைவர் கலைஞர். ரஜினிகாந்த் எடுத்துரைத்த கருத்து என்பது இந்தச் சொல்லின் விரிவாக்கமாக அமைந்திருந்தது.

**“முதலமைச்சராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் கலைஞர் ஒரே மாதிரிதான் இருப்பார். வீட்டு வாசலில் அதிகமாக போலீஸ் இருந்தால் அவர் முதலமைச்சராக இருக்கிறார் என்று அர்த்தம். இல்லாவிட்டால் இல்லை என்று அர்த்தம். அவரைச் சந்திக்கும் போது அதில் எந்த வேறுபாட்டையும் பார்க்க முடியாது”** என்றார் ரஜினிகாந்த் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருகாலத்தில் அளித்த பாராட்டைத்தான் நினைவூட்டியது ரஜினிகாந்த் அவர்களின் பாராட்டு.

“தண்டவாளத்தில் தலைவைத்துப் படு என்றாலும், அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள் என்றாலும் இரண்டையும் ஒன்றாகக் கருதுபவர்தான் என் தம்பி கலைஞர் கருணாநிதி” என்றார் பேரறிஞர் அண்ணா. அரசியல் எல்லைக்கு வெளியில் இருந்து ரஜினிகாந்த் அவர்கள் இதே கருத்தைச் சொன்னார்கள். பதவியாக அல்ல பொறுப்பாக உணர்ந்து கலைஞர் அவர்கள் செயல்பட்டார், செயல்பட வைத்தார் என்பதை உணர்த்துவதாக இருந்தது அது.

தமிழினத் தலைவர் கலைஞரது வழித்தடத்தில் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் எத்தகைய சீரோடும் சிறப்போடும் கட்சியையும், ஆட்சியையும் நடத்தி வருகிறார் என்பதையும் ரஜினிகாந்த் அவர்கள் மனமுவந்து பாராட்டினார்கள்.“சில தலைவர்கள் மறைந்ததற்குப் பிறகு அந்தக் கட்சிகள் எப்படி கலகலத்துப் போய்விடுகின்றன” என்பதைக் கிண்டலாகக் குறிப்பிட்ட ரஜினி அவர்கள்,**“கலைஞர் அவர்கள் மறைவுக்குப் பிறகு நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் வென்று காட்டிவிட்டார் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதுதான் அவரது உழைப்புக்கும் ஆளுமைத்திறனுக்கும் கிடைத்த வெற்றி”** என்றார் ரஜினிகாந்த் அவர்கள்.

மாக்சிம் கார்க்கி எழுதிய ‘தாய்’ காவியத்தில் புரட்சியாளர்கள் இலியிச் லெனினும் ஜோசப் ஸ்டாலினும் வருவார்கள். ‘தாய்’ காவியத்தை கலைஞர் அவர்கள் இப்படித் தொடங்குவார்கள்...

**“இருட்டுக்குள் ரஷ்ய பூமி**
**இடர் பட்டுக் கிடந்த போது**
**ஏறனைய லெனின் ஸ்டாலின்**
**இருதலைவர்களுடன் இணைந்து**
**எழுச்சி முரசு கொட்டி**
**எத்தனை முறையோ சிறைப்பட்டு**
**எழுத்து வடிவிலும் எப்போதும் மணம் வீசும் பூ!**
**மாக்சிம் கார்க்கியாம் மனிதநேய மாண்பு!**
**மன்பதைக்குத் தந்திட்ட சிகப்பு பூ! செம் பூ!**
**அன்னை என்றும் தாய் என்றும்**
**அழைக்கப்படும் அற்புதப் பூ!**
**பல மொழிகளில் மணம் பரப்பும் அப்பூவை**
**கலை வண்ணமுடன்**
**கவிதை நடையில் வழங்குகின்றேன்”** என்றுதான் அந்த நூல் தொடங்கும். இதோ தமிழ்நாட்டின் ‘தாய்’க்காவியத்தில் தலைவர் கலைஞரும், இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலினும் இணைந்து எழுச்சி முரசு கொட்டி எத்தனையோ முறை சிறைப்பட்டு இந்த மானுடம் பயனுற நல்ல பல திட்டங்களைத் தீட்டி முன்மாதிரி மாநிலமாக வளர்த்து வருகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம்.

ரஷ்ய புரட்சி ஏற்படுவதற்கு பத்தாண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டது ‘தாய்’ காவியம். புரட்சிக்கு அடித்தளம் இட்டது ‘தாய்’ காவியம். அம்மா நீலவ்னாவை புரட்சியாளராக ஆக்கினான் மகன் பாவெல். அன்னை அஞ்சுகம் அம்மையார் குறித்து பேரறிஞர் அண்ணா எழுதிய கட்டுரையும் ரஷ்யத் தாயைத் தான் நினைவூட்டும். “நான் அஞ்சுகம் அம்மாவை சந்திக்கும் போதெல்லாம் கழகத்தைப் பற்றித்தான் பேசுவார்” என்று எழுதி இருப்பார் அண்ணா. பேரறிஞர் பெருந்தகையை ‘அண்ணா தம்பி’ என்று அழைத்த ஒரே அன்னை அஞ்சுகம் அவர்கள்தான்.

“இன்றைக்கு நாங்கள் வீணாக அலைவது போல உனக்குத் தெரியலாம் அம்மா! ஒரு காலம் வரும். அப்போது நாங்கள் பேசிய கொள்கை அனைத்தையும் செயல்படுத்திக் காட்டுவோம் அம்மா” என்று அஞ்சுகம் அம்மையாரிடம் தான் சொன்னதாக கலைஞர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள். இதுதானே அரை நூற்றாண்டு வரலாறு!

ரஷ்யத் ‘தாய்’ உருவாக்கியது ஒரு பாவெல் அல்ல. அதையும் தான் மிகச் சரியாகச் சொன்னார் ரஜினிகாந்த் அவர்கள். **“இப்போதுதான் அரசியலில் நுழைந்து கடினமாக உழைத்து, பேச்சில் தனக்கென ஒரு பாணியை உருவாக்கிக் கொண்டு, மக்கள் மத்தியிலும் தொண்டர்கள் மத்தியிலும் அருமையான, பெயர், புகழ் பெற்று அரசியலில் தனக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார் உதயநிதி ஸ்டாலின்”** என்று ஒவ்வொரு சொல்லையும் அளந்தெடுத்து சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் சொன்னபோது அரங்கம் அதிர்ந்தது. **“அடுத்த ஐம்பது ஆண்டுகள் இயக்கத்தை வழிநடத்தப் போகிறவர் மாண்புமிகு உதயநிதி அவர்கள்”** என்று அமைச்சர் எ.வ.வேலு சொன்னபோதும் அரங்கம் அதிர்ந்தது.

கொள்கைகள், அதனை வழிநடத்தும் தலைவர்களை உருவாக்கிக் கொண்டே இருக்கின்றன. தலைவர்கள், தாங்கள் பேசிய கொள்கை நாட்டை உருவாக்கிக் கொண்டே இருப்பார்கள். ‘தாய் காவியம்’ என்பது தத்துவத்தின் காவியம் தானே! ‘திராவிட’ காவியம் அல்லவா தமிழ்நாடு! திராவிட முன்னேற்றக் கழகம்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.8.2024) முகாம் அலுவலகத்தில், மக்கள் நீதி மையத்தின் தலைவர் – கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் வெளிநாட்டுப் பயணம் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தபோது, அவருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.



## தமிழ்நாடு அரசு தொடர்ந்து எதிர்த்து வருகிறது!

# கர்நாடக அரசின் மேகதாது அணைத்திட்டத்தை தடுத்து நிறுத்த சட்டப்பூர்வ நடவடிக்கைகள்!

## நாளிதழ்கள் – ஊடகங்களில் வந்த செய்திக்கு அமைச்சர் துரைமுருகன் விளக்கம்!

**சென்னை, ஆக.26-**

**மேகதாது அணை பற்றி நேற்று முன்தினம் (24.08.2024) நாளிதழ்கள் மற்றும் ஊடகங்களில் வந்துள்ள செய்திகள் குறித்து தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த அறிக்கை வருமாறு:-**

1. கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்ட மேற்கொண்டு வரும் முயற்சிகளை, தமிழ்நாடு அரசு ஆரம்பம் முதலே தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இத்திட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு அரசு பல்வேறு வழக்குகளை தொடர்ந்துள்ளது. இவ்வழக்குகள் அனைத்தும் நிலுவையில் உள்ளன.

2. தமிழக முதல்வர் பதவியேற்றவுடன் 17.06.2021 அன்று இந்திய பிரதமர் அவர்களுக்கு வழங்கிய கோரிக்கை மனுவிலும், 31.03.2022 மற்றும் 26.05.2022 அன்று நேரில் சந்தித்த போது வழங்கிய கோரிக்கை மனுக்களிலும், மேகதாது அணை திட்டத்தையோ அல்லது வேறு எந்த திட்டத்தையோ மேற்கொள்ள கர்நாடகாவிற்கு எவ்வித அனுமதியும் அளிக்க கூடாது என ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும், வலியுறுத்தினார்கள். மேலும், இப்பிரச்சினை தொடர்பாக முதலமைச்சர் அவர்கள், 13.06.2022 அன்று, இந்திய பிரதமர் அவர்களுக்கு ஒரு விரிவான கடிதம் எழுதினார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

### மேகதாது அணைத் திட்டத்தை கைவிட கோரிக்கை வைத்தேன்!

3. அதே போன்று, நான் 06.07.2021 அன்று ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சர் அவர்களை சந்தித்து வழங்கிய கோரிக்கை மனுவில் மேகதாது திட்டத்திற்கு அனுமதி அளிக்க கூடாது என வலியுத்தியதுடன், எனது தலைமையில் அனைத்துக் கட்சி தலைவர்கள் குழு, ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சர் அவர்களை 16.07.2021 அன்று நேரில் சந்தித்து ஒன்றிய அரசு மேகதாது அணை திட்டத்திற்கு சம்மந்தப்பட்ட மாநிலங்களின் இசைவை பெறாமல் எவ்வித அனுமதியும் வழங்கக் கூடாது என வலியுறுத்தியது. மீண்டும் நான் 05.07.2023 அன்று ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து 2023-2024 பாசன ஆண்டில் பில்லிகுண்டுலுவில் வழங்க வேண்டிய நீரை வழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு கோரியதுடன், மேகதாது அணை திட்டத்தினை நிராகரிக்குமாறு அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும் கோரி ஒரு கோரிக்கை மனுவை வழங்கி வலியுறுத்தினேன்.

4. இதனிடையே, கர்நாடக அரசு அதன் 2022-2023 நிதி நிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரியவந்ததையடுத்து, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் கர்நாடக அரசின் இச்செயலுக்கு 21.03.2022 அன்று கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன், இத்திட்டத்திற்கு எவ்வித அனுமதியும் அளிக்கக் கூடாது என ஒன்றிய அரசையும், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தையும், வலியுறுத்தி தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, அனைத்து கட்சி சட்டப்பேரவை தலைவர்கள் குழுவினை தலைமையேற்று, நான் ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சர் அவர்களை 22.06.2022 அன்று நேரில் சந்தித்து, இது குறித்த பொருள் பற்றி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என ஆணையத்திற்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினேன்.

### காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திடம் வலியுறுத்தல்!

5. 01.02.2024 அன்று நடைபெற்ற 28வது காவிரி நீர் மேலாண்மை ஆணைய கூட்டத்தில், நீண்ட விவாதத்திற்கு பிறகு ஆணையம் இத்திட்டத்தினை மத்திய நீர்வள குழுமத்திற்கே திருப்பி அனுப்புவதாக முடிவெடுத்ததை தொடர்ந்து, தமிழ்நாடு நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், 07.02.2024 நாளிட்ட தனது கடிதங்களில் மேகதாது திட்டம் தொடர்பான வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதை சுட்டிக்காட்டி, இத்திட்டம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட இயக்குனரகங்களுக்கு அறிவுறுத்துமாறும் ஒன்றிய ஜல் சக்தி அமைச்சக செயலாளர், மற்றும் மத்திய நீர்வளக் குழும தலைவர் ஆகியோரை கேட்டுக்கொண்டார். மேலும், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், ஒன்றிய சுற்றுச் சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சக செயலாளருக்கு 07.02. 2024 எழுதிய கடிதத்தில், ஏற்கெனவே 19.07.2019 அன்று நடைபெற்ற வல்லுநர்களைக் கொண்ட மதிப்பீட்டுக் குழுவின் (EAC) 25வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவைக் குறிப்பிட்டதுடன், இது தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருப்பதையும் குறிப்பிட்டு ToR வழங்குவதற்கான கர்நாடகாவின் எந்தவொரு கோரிக்கையையும் ஏற்க வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட EAC க்கு அறிவுறுத்துமாறு கோரியுள்ளார்.



இதே போன்று, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் அவர்களும் 20.02.2024 அன்று ஒன்றிய ஜல்சக்தி மற்றும் ஒன்றிய சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகங்களின் செயலர்களுக்கு எழுதிய கடிதங்களிலும், கோரியுள்ளார்.

6. இதனை தொடர்ந்து, நான் 23.02.2024 அன்று ஒன்றிய ஜல்சக்தி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில், 13.12.2024 தேதியிட்ட தனது கடிதத்தில் மேகதாது அணைத் திட்டம் தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருப்பதை அவர்களே தெரிவித்திருப்பதை குறிப்பிட்டு, உச்சநீதிமன்ற தீர்ப்பு வரும்வரை மேகதாது திட்டத்தை கருத்தில் கொள்ள வேண்டாம் என அமைச்சகத்திற்கும், மத்திய நீர்வளக் குழுமத்திற்கும் அறிவுறுத்துமாறு கோரினேன்.

இதனை தொடர்ந்து, மத்தியில் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு, நான் 05.07.2024 அன்று ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்கள் மற்றும் இணை அமைச்சர்கள் ஆகியோரை நேரில் சந்தித்து 2023-2024 பாசன ஆண்டில் பில்லிகுண்டுலுவில் வழங்க வேண்டிய நீரைவழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு கோரியதுடன், மேகதாது அணைத் திட்டம் தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருப்பதையும் சுட்டிக்காட்டி, இத்திட்டத்தினை நிராகரிக்குமாறு அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும் வலியுறித்தி, மீண்டும் ஒரு கோரிக்கை மனுவை வழங்கினேன்.

### தமிழ்நாடு அரசு வலுவான வாதங்களை முன்வைக்கும்!

7. மேற்குறிப்பிட்டவாறு, மேகதாது அணை தொடர்பாக தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, தமிழ்நாடு அரசு சார்பாக வலுவான வாதங்கள் முன் வைக்கப்படும். காவிரி நடுவர் மன்றம் 05.02.2007ல் அளித்த இறுதித் தீர்ப்பிலும், உச்ச நீதிமன்றம் 16.02.2018 அன்று அளித்த தீர்ப்பிலும், கர்நாடகாவில் மேகதாது அணைக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. மேலும், கர்நாடக அரசு இத்திட்டத்திற்கு மத்திய நீர்வள குழுமத்தின் பன்மாநில நதி நீர் இயக்குனகரத்தின் ஒப்புதல், வனம் மற்றும் சுற்றுசூழல் அமைச்சகத்தின் ஒப்புதல், படுகை மாநிலங்களின் ஒப்புதல், இவை எதையும் பெறாமல் கட்ட இயலாது. கர்நாடக அரசின் இத்திட்டத்தை தடுத்து நிறுத்த, தமிழக மக்கள் மற்றும் விவசாயிகளின் நலன் காக்க தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும், சட்டபூர்வமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.